## மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில்

# 2 அடுக்கு வாகன நிறுத்த வசதி தொடக்கம்

■ சென்னை

மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருசக்கர வாகனங்களை 2 அடுக்காக நிறுத்தி வைக்கும் வசதி தொடங்கப்பட்டுள்ளது.

சென்னையில் அலுவலகம் செல்பவர்கள், தொழில்ரீதியாக பயணிப்பவர்கள், விமான நிலையம், சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள், கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களுக்கு செல்லும் பலரும் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

மெட்ரோ ரயிலில் செல்பவர்கள் தங்களது வாகனங்களை விட்டுச்செல்ல வசதியாக விமான நிலையம், ஆலந்தூர், திருமங்கலம், கோயம்பேடு, வடபழனி, அசோக்நகர் உள்ளிட்ட 23 ரயில் நிலையங்களிலும் வாகனம் நிறுத்தும் இடவசதி அமைக்கப்பட்டு உள்ளது.

இருப்பினும், சில இடங்களில் இட நெருக்கடி ஏற்படுவதால், போதிய அளவில் வாகன நிறுத்த வசதியை மேம்படுத்துமாறு பயணிகள் கூறி வருகின்றனர். அதற்கு வாய்ப்பு இருக்கும் நிலையங்களில் வாகன நிறுத்த வசதி விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் புதிதாக இருசக்கர வாகனங்கள் நிறுத்த 2 அடுக்கு இட வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய வசதியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல்.நரசிம் பிரசாத் நேற்று தொடங்கி வைத்தார்.

இதில் தரைதளத்தில் 5 இருசக்கர வாகனங்கள், தரையில் இருந்து 9 அடி உயரத்தில் 5 இருசக்கர வாகனங்கள் நிறுத்தலாம். இதன் மூலம் 5 வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் 10 வாகனங்கள் நிறுத்த முடியும். வாகனங்களை மேலே கொண்டுசெல்ல ஹைட்ராலிக் வசதியும், கீழே இறக்க புவிஈர்ப்பு விசையும் பயன்படுத்தப்படுகின்றன.

சோதனை முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வசதியை மற்ற மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் இடங்களிலும் செயல்படுத்த சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



▲ சென்னை மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்தில் ஈரடுக்கு இருசக்கர வாகன நிறுத்த வசதியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) எல்.நரசிம் பிரசாத் நேற்று தொடங்கிவைத்தார். இதன்மூலம் தரைதளத்தில் 5 இருசக்கர வாகனங்களும், தரையில் இருந்து 9 அடி உயரத்தில் 5 இருசக்கர வாகனங்களும் நிறுத்தலாம்.